**பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டம் - 2023**

---

பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 செப்தெம்பர் 08 ஆம் திகதிய செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 55 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையின் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் உள்ள செயற்திட்ட சமூகங்களை வலுவூட்டுவதற்காக பாதுகாப்பான, வினைத்திறனான மற்றும் காலநிலையைத் தாங்கக்கூடிய இணைப்பை வழங்குவதும், விவசாய விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துவதும் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 101,499.6 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 500 மில்லியன் தொகையானதுடன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. 2023 ஏப்ரல் 19 ஆம் திகதிய ஆர்ஈஎஸ்51645 ஆம் இலக்க மறுசீரமைப்பு பத்திரத்தின் பிரகாரம் கடன் தொகையானது தற்செயல் அவசரகால பதிலளிப்பு கூறுக்கான (CERC) ஐ.அ.டொலர் 325 மில்லியன் மீள்ஒதுக்கீடு காரணமாக ரூபா 54,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. ரூபா 300 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.83 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2021 நவம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2026 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா (மில்லியன்) | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | கடன் உடன்படிக்கையின் 2.03 ஆம் பிரிவின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 6,392 | கடனுடன் தொடர்புடைய கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் வட்டி என்பன கடன் உடன்படிக்கையின் ஒரு கூறாக ஏற்பட்டிருக்கவில்லை. | கடப்பாட்டு மற்றும் வட்டி கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவையாக உள்ள இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களில் சேர்க்கப்பட்டுள்ள வேலை ஆரம்பிப்பு முற்பணம் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 33.43 | நான்கு ஒப்பந்தப் பொதிகளுக்கான நிலுவையாக உள்ள இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்கள், வேலை ஆரம்பிப்பு முற்பண அறவீட்டு தொகையைக் கருத்தில் கொள்ளாமல் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | நிலுவையாக உள்ள வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் நிலுவையாக உள்ள இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்களில் இருந்து கழிக்கப்பட்ட பிடித்துவைத்தல் பணம் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் மாத்தளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் உள்ள பொதி 251198 இன் லொட் இல. 2 மற்றும் பொதி 251205 இன் லொட் இல. 3 ஆகியவற்றுடன் தொடர்புடைய பிடித்துவைத்தல் பண பெறுமதி மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணமாக சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | 4.3 | இடைக்கால கொடுப்பனவு சான்றிதழுக்கான ஏற்பாடுகளைச் மேற்கொள்ளும்போது எதிர்காலத்தில் அது சீர்செய்யப்படும். | நிறுத்திவைத்தல் பணத் தொகை அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்த நிபந்தனையின் உட்பிரிவு 14.3 (iii) இன் பிரகாரம் ஒப்பந்தத் தொகையின் 5 சதவீத எல்லை வரை மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் 10 சதவீதத்தை பிடித்துவைத்தல் பணமாக வைத்துக்கொள்ளலாம். மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்ததாரரிடமிருந்து | 4 | ஒப்பந்தத் தொகையின் அதிகபட்ச வரம்பான 5 சதவீதத்தை விஞ்சியதால், குறிப்பிட்ட ஒப்பந்தப் பொதியின் பிடித்துவைத்தல் பணம் தவறாகக் கழிக்கப்பட்டுள்ளது. எனினும், அடுத்த இடைக்கால கொடுப்பனவு | ஒப்பந்த முகாமைத்துவ செயன்முறை ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுடன் இணங்க வேண்டும். மேலும் இரு தரப்பினரின் உரிமைகளையும் |

| | | | |
|---|---|---|---|
| | பிடித்துவைத்தல் பணத் தொகை மேலதிகமாக அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சான்றிதழில் இருந்து இந்தக் கழிக்கப்பட்ட பிடித்துவைத்தல் பணத் தொகை சீர்செய்யப்பட்டுள்ளது. | பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் 8.4 மற்றும் 8.7 ஆம் பிரிவு | ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுக்காக ஒப்பந்ததாரர் பணிகளை பூர்த்திசெய்வதற்கு கால நீடிப்புக்கு (EOT) உரித்துண்டு. எனினும், 07 ஒப்பந்தங்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட EOT இன்றி தொடரப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தின் அங்கீகரிக்கப்பட்ட கால அவகாசம் முடிவதற்குள் EOT ஐ வழங்குவதற்கு அல்லது ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகளுக்கு முரணாக தாமதமான காலப்பகுதிக்கான தாமத சேதங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டின் பொருளாதார நெருக்கடி இரத்தினபுரி, மாத்தளை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் ஒப்பந்தங்களில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததுடன் எரிபொருள் தட்டுப்பாடு, நிர்மாணப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து பிரச்சினைகள் காரணமாக தொழிலாளர்கள் பற்றாக்குறை ஆகியவற்றால் வகைப்படுத்தப்பட்டிருந்தது. இந்த சவால்களுக்கு பதிலளிக்கும் வகையில், ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு ஏற்ப ஒப்பந்ததாரர்கள் கால நீட்டிப்புகளை (EOT) அவ்வப்போது கோரினர். | ஒப்பந்த முகாமைத்துவ செயன்முறை ஒப்பந்த நிபந்தனைகளுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) கடன் உடன்படிக்கையின் அட்டவணை 2 பிரிவு I.ஆ 2 | கடன் உடன்படிக்கை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் ஒரு செயற்திட்டச் செயற்பாட்டுக் கையேடு (POM) தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயற்பாட்டிற்கான செயற்திட்டத்தின் அத்தகைய கையேட்டு பயன்பாடு தொடர்பாக கணக்காய்விற்கு சான்றுகள் வெளிப்படுத்தப்படவில்லை. மேலும், இந்த விடயம் | செயற்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட செயற்திட்ட செயற்பாட்டு கையேடு (POM) கடனை மறுசீரமைப்பதுடன் திருத்த வேண்டியுள்ளது. எனவே, 2023 ஒக்தோபரில் கடைசி பணியின் போது உலக வங்கி வழங்கிய கருத்துரைகளின் பிரகாரம், POM இல் மாற்றங்கள் செய்யப்பட்டன. | கடன் உடன்படிக்கையின் நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்படுதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்னைய ஆண்டில் எமது கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டது, மேலும் இந்த நிலைமை செயற்திட்ட காலப்பகுதியில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதில் நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்ற பார்வையில் கணக்காய்வு செய்யப்பட்டது. | | |
| (இ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 04 கூட்டங்கள் மாத்திரமே மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | விடயங்களின் முன்னுரிமை மற்றும் அதன் தேவைகளை கருத்தில் கொண்டு செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டம் நடாத்தப்படுகிறது. அடிப்படையில், செயற்திட்டம் அதன் அமுல்ப்படுத்தல் கட்டத்தில் இருந்ததுடன் மீளாய்வாண்டில் செயற்திட்டச் செயற்பாடுகள் சீராக செயற்பட்டன. | அனைத்து வழிநடாத்தல் குழுக்களும் நிர்ணயிக்கப்பட்ட முறையில் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2012 பெப்ரவரி திகதியிடப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான (வேலைகள்) செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவத்திற்கான வழிகாட்டியின் பிரிவு 2 இன் நடைமுறை CA 38 முதல் 41 வரை | பொறியியலாளர்கள், செயற்திட்ட பணிப்பாளர், ஒப்பந்ததாரர் பிரதிநிதிகள் மற்றும் பொறியியலாளர் சிரேஷ்ட பதவியணியினர் பங்கேற்கும் முன்னேற்றக் கூட்டங்கள் மாதாந்தம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் பல மாவட்டங்களில் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையில் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | PMU பதவியணியினர் வீதி அடையாளங்காணும் நடவடிக்கைகள், ஏனைய முன்மொழியப்பட்ட மாவட்டங்கள் தொடர்பான பெறுகை தொடர்பான நடவடிக்கைகளுக்கு இணையாக வருகை தர வேண்டியிருப்பதால், சில மாவட்டங்களுக்கு மாதாந்தம் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டங்களை நடாத்த முடியவில்லை. | குறிப்பிட்ட வழிகாட்டல்களைப் பின்பற்றுதல். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

#### (அ) வீதி புனரமைப்பு

| கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | |
| | | கிமீ | கிமீ | | |
| பாதுகாப்பான மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல் | கிராமிய வீதியின் புனரமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்பு | 1,096.8 | 251.18 | செயற்திட்டம் தொடங்கப்பட்டு 02 ஆண்டுகளுக்குப் பின்னரும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிவில் பணிகளின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 27.04 சதவீதத்தை மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. | ஒப்பந்ததாரர்களின் மோசமான செயலாற்றல் |

**முகாமைத்துவத்தின் பதில்** சிவில் வேலை முன்னேற்றம் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் அனைத்து நிர்மாண நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் பிரதிபலிக்கிறது. இது மொத்த நீளத்தில் அஸ்பால்ற் இடப்பட்ட வீதி நீளத்தின் பகுதிக்கு மட்டுப்படுத்தப்படவில்லை.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** கால எல்லைக்குள் குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

#### (ஆ) வீதி புனரமைப்பு ஒப்பந்தத்தை வழங்குதல்

| கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் துண்டுகள் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் துண்டுகள் | | |
| பாதுகாப்பான மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல் | கிராமப்புற வீதிகளின் புனரமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்புக்கான ஒப்பந்தத்தை வழங்குதல் | 27 | 24 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 துண்டுகளில் மாத்திரமே புனரமைப்பு பணிகள் பூர்த்தியடைந்துள்ளமையும், மீதமுள்ள 22 துண்டுகளின் பௌதீக முன்னேற்றம் 15.45 சதவீதத்திலிருந்து 99.3 சதவீதம் வரை இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. மேலும், இரத்தினபுரி, மாத்தளை மற்றும் அனுராதபுரம் | ஒப்பந்ததாரர்களின் மோசமான செயலாற்றல் மற்றும் மோசமான ஒப்பந்த நிர்வாகம் |

| | | |
|---|---|---|
| | | மாவட்டங்களில் முழுமையடையாத 08 துன்டுகளின் ஆரம்ப ஒப்பந்த காலப்பகுதி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. |

**முகாமைத்துவத்தின் பதில்** 2023 திசெம்பர் இறுதியளவில், 7 மாவட்டங்களில் மொத்தம் 24 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிவில் வேலை ஒப்பந்தங்கள் வெவ்வேறு கால இடைவெளிகளில் வழங்கப்படுவதால், ஒவ்வொரு ஒப்பந்தத்தின் முன்னேற்றமும் தொடர்புடைய ஒப்பந்தத்தின் நிகழ்ச்சித்திட்டத்தில் தங்கியுள்ளது. ஒரு ஒப்பந்தத்தின் முன்னேற்றத்தை ஏனைய ஒப்பந்தங்களின் முன்னேற்றத்துடன் ஒப்பிட முடியாது. எனினும், நிலவும் பொருளாதார நெருக்கடியிலும் இரண்டு ஒப்பந்தங்கள் சரியான நேரத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** கால எல்லைக்குள் குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

**சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் ஒப்பந்ததாரர்களை தெரிவுசெய்தல்**

இரத்தினபுரி மாவட்டத்தில் 76.62 கிமீ கிராமப்புற வீதிகளை புனரமைத்தல்/ மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்கான ஒப்பந்ததாரர்களை தெரிவுசெய்தல் நான்கு லொட்களின் (lots) கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் லொட் 3 மற்றும் 4 ஐ மீண்டும் கேள்வி கோருவதற்கு பரிந்துரைக்கப்பட்ட போதிலும் பெறுகை குழு முறையே ரூபா 1,150 மில்லியன் மற்றும் ரூபா 824 மில்லியன் கிரயத்தில் பொறியியல் மதிப்பீடுகளைத் திருத்தியமைத்து ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முடிவு செய்திருந்தது. மேலும், TEC இன் பரிந்துரைகள் திருத்தப்பட்ட பொறியியல் மதிப்பீடுகள் மற்றும் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு பெறப்பட்டிருக்கவில்லை. | உலக வங்கியின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, மீண்டும் கேள்வி கோரும் முடிவு இரத்து செய்யப்பட்டது. பின்னர், அவர்களின் வழிகாட்டலின் பிரகாரம் பொறியியல் மதிப்பீடுகள் மறுபரிசீலனை செய்யப்பட்டன. கேள்வி மதிப்பீட்டு அறிக்கையுடன் (BER) சேர்த்து ஒரே நேரத்தில் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் அமைச்சு பெறுகைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. | பெறுகை வழிகாட்டல்கள் கடைபிடிக்கப்படுவதுடன் முரண்பாடுகள் குறித்து விசாரணை நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை கையேட்டின் 7.9.2 (கா) பந்திக்கு முரணாக பொறியியல் மதிப்பீடுகளைத் திருத்திய பின்னரும், லொட் 03 மற்றும் லொட் 04 இன் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கேள்வி விலைகள் முறையே 23.65 சதவீதம் | தேசிய அளவில் வெளியிடப்பட்ட கேள்வி மூலம் பெறுகை செயன்முறை தேசிய போட்டி கேள்வி மூலம் நடாத்தப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) பரிந்துரைத்ததுடன் தொடக்கத்தில், அமைச்சின் | பெறுகை வழிகாட்டல்கள் கடைபிடிக்கப்படுவதுடன் முரண்பாடுகள் குறித்து விசாரணை நடாத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 26.31 சதவீதத்தை விட அதிகமாக இருந்தன. | பெறுகைக் குழு (MPC) அசல் பொறியியலாளரின் மதிப்பீடுகளிலிருந்து விலகல் காரணமாக லொட்-3 மற்றும் லொட்-4 இற்கு மீண்டும் கேள்வியை கோருவதற்கு முடிவு செய்தது. | |
| (இ) | மதிப்பீடுகள் 23 சதவீதத்திற்கும் அதிகமான அதிகரிப்பை சுட்டிக்காட்டியுள்ளன, IPF கடன் பெறுபவர்களுக்கான உலக வங்கி விதிமுறைகளின் 5.58 (இ) பிரிவுக்கு முரணாக சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுடன் பேச்சுவார்த்தை அல்லது மீண்டும் கேள்விகோரல் இல்லாமல் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சு பெறுகைக் குழு முடிவு செய்துள்ளது. | IPF கடன் பெறுபவர்களுக்கான உலக வங்கி ஒழுங்குமுறை கேள்வி மதிப்பீடு மற்றும் கேள்வி ஆவணத்தை விட பெறுகை நடைமுறைக்கான வழிகாட்டியாக செயற்படுகிறது. | பெறுகை வழிகாட்டல்கள் கடைபிடிக்கப்படுவதுடன் முரண்பாடுகள் குறித்து விசாரணை நடாத்தப்பட வேண்டும். |

**3.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் தற்செயலான அவசரகால பதிலளிப்பு கூறின் (CERC) செயற்படுத்தல் மற்றும் சமீபத்திய பொருளாதார நெருக்கடி, கடன் நெருக்கடி மற்றும் அந்நியச் செலாவணி சந்தையில் திரவத்தன்மை பற்றாக்குறைகள் ஆகியவற்றிற்கு பதிலளிக்கும் வகையிலான நிதி ஒதுக்கீடு என்பவற்றின் பிரகாரம் ஐ.அ.டொலர் 500 மில்லியன் ஆரம்பக் கடன் தொகை CERC இற்கு ஐ.அ.டொலர் 325 மில்லியன் ஒதுக்கப்பட்ட பின்னர் ஐ.அ.டொலர் 175 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டங்களின் ரூபா 59,062.51 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 175 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் செயற்திட்டமானது ரூபா 13,951.87 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது. நடந்துகொண்டிருக்கும் ஒப்பந்தங்களின் மெதுவான முன்னேற்றங்கள் மற்றும் செயற்திட்டத்தின் கூறு 2 ஐ தொடங்குவதில் தாமதம் ஆகியவை முக்கியமாக கடன் நிதியின் மோசமான பயன்பாட்டிற்கு தாக்கமளித்திருந்தன. | நாட்டில் நிலவிய பொருளாதார காரணிகளின் பாதகமான நடத்தை மற்றும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக இலக்கை அடைந்துகொள்ள முடியவில்லை. | கடன் நிதி செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டமானது ரூபா 11,674.16 மில்லியன் கடன் நிதி ஒதுக்கீட்டில் ரூபா 9,045.64 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியிருந்ததுடன் இது மீளாய்வாண்டில் | இது முக்கியமாக நாட்டில் நிலவும் பொருளாதார காரணிகளின் பாதகமான நடத்தை மற்றும் | கடன் நிதியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் 77.48 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. | பொருளாதார வீழ்ச்சி, பாதகமான வானிலை மற்றும் 2023 ஆம் ஆண்டில் சில ஒப்பந்தங்களை வழங்குவதில் தாமதம் ஆகியவற்றுடன் செயற்திட்ட செயலாற்றலில் தாமதம் ஏற்பட்டது. | எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் விசேட டொலர் கணக்கு இல. 73633 (SL-2019) இன் பிரகாரம் செயற்திட்டமானது மீளாய்வாண்டில் முற்பணமாக ரூபா 8,638.70 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 26.5 மில்லியன் தொகையை வழங்கியுள்ளதுடன் ரூபா 2,174.55 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 6.72 மில்லியன் தொகை இந்த ஆண்டின் இறுதியில் பயன்படுத்தப்படாமல் இருந்தது. கடன் வழங்கும் முகவரிற்குச் சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட வேண்டிய கடப்பாட்டுக் கட்டணங்களைக் குறைப்பதற்கு முறையான மதிப்பீட்டிற்குப் பின்னர் முற்பணங்கள் கோரப்பட வேண்டும் என்ற பார்வையில் கணக்காய்வு உள்ளது. | நாட்டில் நிலவும் பொருளாதார காரணிகளின் பாதகமான நடத்தை மற்றும் பொருளாதார மந்தநிலை, பாதகமான வானிலை மற்றும் 2023 ஆம் ஆண்டில் சில ஒப்பந்தங்களை வழங்குவதற்கான பெறுகை செயன்முறையில் தவிர்க்க முடியாத தாமதம் ஆகியவற்றால் செயற்திட்ட செயலாற்றலில் தாமதம் காரணமாக எதிர்பார்த்த செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்ள முடியவில்லை. | கடன் நிதியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுல்ப்படுத்தலில் தாமதம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதித் துறையின் நிறுவன மற்றும் கொள்கைக் கட்டமைப்பை மேம்படுத்துதல் - (உப-கூறு 1.2)** | | |
| | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், உப-கூறு 1.2 இன் கீழ் வீதித் துறையின் நிறுவன மற்றும் கொள்கை கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு ஐ.அ.டொலர் 5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த உப-கூறு செயற்திறனை நிலைநிறுத்துவதற்கும் அதிகரிப்பதற்கும் மற்றும் வளர்ந்து வரும் இணைப்புத் தேவைகள் மற்றும் சவால்களுக்கு பதிலளிக்கும் திறனை மேம்படுத்துவதற்கும் வீதித் துறையின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எனினும், மாகாண மற்றும் கிராமப்புற வீதி வலையமைப்பை இலக்காகக் கொண்ட ஒரு பகுத்தறிவு வீதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குதல், வீதித் துறையை முகாமை செய்வதற்குப் பொறுப்பான பொது நிறுவனங்களின் கட்டமைப்பு மற்றும் கட்டளைகளை ஒழுங்குபடுத்துவதற்கான வாய்ப்புக்களை இனங்காண்பதற்கு நிறுவன அமைப்புக்களை மதிப்பாய்வு செய்தல் மற்றும் | ICDP இன் PMU அலுவலகத்தில் குறைந்த எண்ணிக்கையிலான செயற்திட்டப் பொறியியலாளர்கள் காரணமாக மேற்கூறிய கூறுகளின் கீழ் முன்மொழியப்பட்ட செயற்பாடுகள் ICDP க்கு மட்டுப்படுத்தப்படவில்லை, வீதித் துறையின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக PMU RDA இன் தொடர்புடைய பிரிவுகளின் ஆதரவைப் பெறுகிறது. | கால எல்லைக்குள் குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதியுதவியை மேம்படுத்துவதற்கான பல்வேறு வழிமுறைகளை ஆராய்தல், ஆளும் கட்டமைப்பிற்குள் மீட்சிபெறக்கூடிய வீதி நிர்மாணங்களுக்கு நிதியளிப்பது மற்றும் கிராமப்புற வீதிகளின் பராமரிப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான பல்வேறு பொறிமுறைகளை ஆராய்தல் போன்ற குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் செயற்திட்டச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 02 வருடங்கள் கடந்த பின்னரும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| **(ஆ) வீதித் துறை மற்றும் சமூகத் திறன் மேம்பாடு – உப-கூறு 1.3** | | |
| 2023 மே 09 ஆம் திகதிய செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம் மற்றும் செயற்திட்ட மறுசீரமைப்பு தாள் இல. RES 51645 இன் 24 ஆம் பிரிவின் பிரகாரம், இந்த உப-கூறுக்காக ஐ.அ.டொலர் 8.75 மில்லியனில் ஐ.அ.டொலர் 7.25 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், பொதுத்துறை நிறுவனங்களுக்கான திறன் மேம்பாடு, காலநிலையைத் தாங்கக்கூடிய வீதி வலையமைப்பு திட்டமிடல், வடிவமைப்பு, பராமரிப்பு மற்றும் அறிவு மேம்பாடு, உள்ளூர் நிர்மாண தொழில்துறையில் சேவை வழங்குநர்களிற்கான திறன் மேம்பாடு மற்றும் உள்ளூர் சமூக குழுக்களுக்கான திறன் மேம்பாடு போன்ற இந்த கூறின் கீழ் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1.14 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. எனவே, செயற்திட்ட காலப்பகுதியில் ஒவ்வொரு துணைக் கூறுகளின் இலக்குகளையும் அடைந்துகொள்வது கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாகும். | PMU ஏற்கனவே கூறு 1.3 இன் கீழ் நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு முன்முயற்சிகளை எடுத்துள்ளது. மேலும், மேற்கூறிய கூறுகளின் கீழ் நடவடிக்கைகளை உடனடியாக அமுல்ப்படுத்துவதற்கு PMU அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். | கால எல்லைக்குள் குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |
| **(இ) கூறு – 2 ஐ அமுல்ப்படுத்துதல் : விநியோகச் சங்கிலியை மேம்படுத்துதல் மற்றும் விவசாயிகளுக்கான சேவைகளுக்கான அணுகல்** | | |
| அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு விவசாய அமைச்சுடன் இணைந்து ஒரு கூட்டு அமுல்ப்படுத்தல் பொறிமுறையைத் தயாரித்து நிறுவுவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. ஆரம்பத்தில், இந்தக் கூறுக்கு ஐ.அ.டொலர் 50 மில்லியன் ஒதுக்கீடு செயயப்பட்டு, 2023 மே 09 இல் மறுசீரமைப்புத் தாளில் இருந்து | செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கூறு 2 தொடர்பான நடவடிக்கைகள் விவசாய அமைச்சின் (MOA) கீழ் உள்ளதுடன் முன்மொழிவை இறுதி செய்வதில் தாமதம் உள்ளது. எனவே, PMU | கால எல்லைக்குள் குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஐ.அ.டொலர் 15 மில்லியன் வரை குறைக்கப்பட்டது. எனினும், மேற்படி அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பரிந்துரைகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்தக் கூறு தொடங்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவைப் பெற்றவுடன், கூறு 2 ஐ அமுல்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| **செயற்திட்டத்தின் கீழ் தற்செயல் அவசரகால பதிலளிப்புக் கூறை (CERC) செயற்படுத்துதல்**<br><br>திறைசேரிச் செயலாளரின் 2022 மே 09 ஆம் திகதிய கடிதம் மற்றும் 2022 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய உலக வங்கியின் நாட்டு பணிப்பாளரால் அனுப்பப்பட்ட தொடர் கடிதம் ஆகியவற்றின் பிரகாரம் செயற்திட்டத்தின் தற்செயல் அவசரகால பதிலளிப்பு கூறுக்காக ஐ.அ.டொலர் 325 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைப்பதற்கும், உடனடித் தேவைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பை வழங்குவதன் மூலம் சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் CERC நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட நோக்கெல்லையின் மாற்றங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தனியான மறுசீரமைப்பு பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப நோக்கங்களில் இருந்து விலகுவதற்கு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) செயற்திட்டத்தின் நோக்கெல்லை வரம்பிற்குப் பின்னர் செயற்திட்ட அபிவிருத்தி நோக்கங்கள், செயற்திட்ட பெறுபேற்றுக் கட்டமைப்பு, அமுல்ப்படுத்தல் ஏற்பாடுகள், பணவளிப்பு இலக்குகள் மற்றும் நிபந்தனைகள், சுற்றாடல் மற்றும் சமூக கட்டமைப்பு என்பன அதற்கேற்ப மாற்றப்பட வேண்டும். எனினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம் அதற்கிணங்க திருத்தப்பட்டிருக்கவில்லை. இது எதிர்காலத்தில் சரியான முன்னேற்றத்தை மோசமாக பாதிக்கலாம். | நிதியளிப்பு முகவராண்மையின் ஒத்துழைப்புடன் செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் திருத்தம் மேற்கொள்ளப்படும். 2023 ஏப்ரல் 6 இல் திறைசேரியின் செயலாளருக்கு நாட்டின் பணிப்பாளரால் அனுப்பப்பட்ட கடிதம், கடன் உடன்படிக்கைகள் மற்றும் செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம் தொடர்பான அனைத்து திருத்தங்களுடனும் | மீளாய்வின் பிரகாரம் செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சுட்டிக்காட்டப்பட்டது. | |
| (இ) | 2023 மே 09 இல் மறுசீரமைப்பு ஆவணத்திற்கு அங்கீகாரம் அளித்த பினனர், தற்செயல் அவசரகால பதில் கூறுகளை (CERC) செயற்படுத்துவதன் மூலம் அவசரகால நெருக்கடி பதிலளிப்பு பொதிக்காக ஐ.அ.டொலர் 325 மில்லியன் தொகையை மீள ஒதுக்கீடு செய்ததால் செயற்திட்டத்தின் மொத்த கிரயம் குறைக்கப்பட்டது. எனினும், 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்திக்கு முரணாக, செயற்திட்டத்தை மறுசீரமைப்பதற்கு முன்னர் உரித்துள்ள வரம்புகளைக் கருத்தில் கொண்டு செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவின் பதவியணியினரிற்கு சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. | மறுசீரமைப்பு ஆவணம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் PMU பதவியணியினரின் ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் அதற்கேற்ப திருத்தப்பட்ட சம்பளத்தைப் பிரதிபலிக்கும் வகையில் சீர்செய்யப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை கடைபிடித்தல். |